

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உணவருந்தி, அவர்களுடன் உரையாடினார்.

# கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாரா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுடைய சாப்பாட்டையும் கவனமாக 'ஸ்பெஷல் கேர்' எடுத்து பாருங்கள். நான் ஆய்வுக்கு வெளியூர் போகும் போதெல்லாம், ஏதாவது ஒரு ஸ்கூலுக்கு திடீர் என்று போகிறேன். அங்கே இருக்கின்ற பிள்ளைகளுடன் பேசுகிறேன். காலை உணவு எப்படி இருக்கும் என்று பார்க்கிறேன். அந்த உணவை நானே சாப்பிட்டும் பார்க்கிறேன்.

அமைச்சர் தம்பி உதயநிதிகூட சுற்றுப்பயணம் போகிறபோது, நிகழ்ச்சிக்குப் போகிறபோது இதுபோல ஆய்வு செய்வதை பார்க்கிறேன். மற்ற அமைச்சர்களும், மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட ஆட்சியர்களும், அதிகாரிகளும் அவரவர்கள் பகுதிகளில் இருக்கின்ற பள்ளியில் இப்படி திடீர், திடீரென்று ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**எந்தத் தடைகளையும் உடைப்பதே முதல் பணி!**

திராவிட மாடல் அரசையும், என்னையும் பொருத்தவரைக்கும் நம்முடைய தமிழ்நாட்டு பசங்க படிப்பதற்கு எதுவும் தடையாக இருக்க கூடாது என்று நினைக்கிறோம். அது பசியாக இருந்தாலும் சரி, நீட் தேர்வாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் சரி, எந்தத் தடை வந்தாலும் அந்த தடைகளை உடைப்பதுதான் எங்களுடைய முதல் பணி!

நீட் தேர்வை நாம் எதிர்க்க தொடங்கியபோது ஏன் எதிர்க்கிறீர்கள் என்று சிலர் எதிர்கேள்வியை கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு நீட் தேர்வில் நடக்கின்ற முறைகேடுகளை பார்த்து, உச்சநீதிமன்றம் கேள்வி கேட்கின்றது. மாணவர் சமுதாயம் போர்க்கொடி தூக்கு கின்றது. பல முதலமைச்சர்கள், தேசிய தலைவர்கள் நீட் வேண்டாம் என்று குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏன்? ஒட்டுமொத்த இந்தியாவும் தமிழ்நாட்டு வழியில், நீட் தேர்வை எதிர்க்கின்றது!

ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலுக்காக இப்போது, நெருக்கடி நிலையை பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், நாம் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி நெருக்கடி நிலை காலத்தில், ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வியை உடனடியாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாராக இருக்கிறதா? இந்த ஆக்கபூர்வமான செயலை அவர்கள் செய்வார்களா?

**கல்வியில் கவனம் செலுத்துங்கள்!**

நம்மை பொறுத்தவரை, நீட் தேர்வு - புதிய கல்விக் கொள்கை தேவையற்றது. அதை எதிர்க்கிறோம். ஒருபக்கம் அரசியல் மற்றும் சட்டப் போராட்டங்களை நடத்துகிறோம். இன்னொரு பக்கம் மாணவர்களின் நலனுக்காக பள்ளிக்கல்விக்கும், கல்லூரிகளுக்கும், உயர்கல்விக்கும் ஏராளமான திட்டங்களை தீட்டுகிறோம். எனவே, "தடைகளை நாங்கள் உடைக்கிறோம். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால், நான் திரும்பவும் சொல்கிறேன், கல்வி தான் யாராலும் திருட முடியாத சொத்து, அந்த சொத்தை தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றாகவேண்டும்.

மாணவச் செல்வங்களே! "படிங்க... படிங்க...படிங்க... நீங்கள் உயர படிங்க.. நீங்கள் உயர... உங்கள் வீடும் உயரும்! இந்த நாடும் உயரும்!" என்று உங்களையெல்லாம் மனதார வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்! பிறந்தநாளில்

# காமராசருக்குப் பெருமை சேர்த்தேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 17 -

"காமராசர் அவர்களின் பிறந்த நாளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அவருக்குப் பெருமை சேர்த்தேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 122வது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அவருக்குப் பெருமை சேர்த்தேன்!**

**மங்காப் புகழ்கொண்ட அவரது வாழ்வையும் தொண்டையும் கல்வி வளர்ச்சி நாளில் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

---

'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' விரிவாக்கம்!

# மாணவச் செல்வங்களின் பசி போக்கிய மனநிறைவு அடைந்தேன்!

## திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 17 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.7.2024) உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்தது தொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கம் செய்யப்பட்டவுடன் தமிழ்நாடு முழுக்க எத்தனை குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டது என்பதை முதலமைச்சரின் தகவல் பலகை (CM Dash Board) வழியாகக் கண்காணித்து, மாணவச் செல்வங்களின் பசி போக்கிய மனநிறைவு அடைந்தேன்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

உதகை நகரக் கழகம் சார்பில் நகரச் செயலாளர் ஜார்ஜ் தலைமையில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் கழகக் கொடியேற்றினார் !

உதகை, ஜூலை 17-

உதகை நகர தி.மு.க.. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாள், பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நகரச் செயலாளர் ஜார்ஜ் தலைமை வகித்தார். மாவட்டக் கழகச் செயலாளர் முபாரக் கழக கொடியேற்றி சிறப்பித்தார்.

மேலும் ரந்தீர் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.இராமச்சந்திரன் வழங்கி சிறப்பித்தார்.

மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, மாவட்ட அவைத் தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், ராஜூ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பிரேம் குமார் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, நகரமன்றத் தலைவர் வாணீஸ்வரி, நகர அவைத் தலைவர் ஜெயகோபி, நகர துணைச் செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், ரீட்டா மேரி, நகர பொருளாளர் அணில் குமார், மாவட்ட பிரதிநிதிகள் தம்பி இஸ்மாயில், கார்த்திக், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மஞ்சுகுமார், ரவி, ராஜா, கவுன்சிலர்கள் செல்வராஜ், ரமேஷ், விஷ்ணு பிரபு, ரகுபதி, கஜேந்திரன், ரவி, வனிதா, பிரியா, மேரி புளோரினா, புஷ்பராஜ்,

கழக நிர்வாகிகள், கமல கண்ணன், ஹென்றி ஜேம்ஸ், காந்தல் சம்பத், நிக்கோலஸ், சதாசிவம், ஸ்டீபன், செல்வராஜ், முஸ்தபா, ரஞ்சித், சுரேஷ், மகேஷ், நேரு, செந்தில்குமார், கண்ணன், ஷானவாஸ், மூர்த்தி, ரஞ்சித், சிவா, பிரகாஷ், ராமமூர்த்தி, சார்லஸ்,

மகளிர் அணி லூவிசா, பிருந்தா, பியூலா-ஜெனட், ஷைலா, செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.





உதகை நகரக் கழகம் சார்பில் நகரச் செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், அமைச்சர் கா.இராமச்சந்திரன் ஆகியோர் கழகக் கொடியை ஏற்றி நல உதவிகள் வழங்கினர்.

---

# கும்முடிப்பூண்டியில் காலை உணவுத் திட்டம் தொடக்கம்!

திருவள்ளூர், ஜூலை 17–

கழக தலைவர் – முதலமைச்சர் அவர்கள் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் ஊராட்சி புனித மரியன்னை துவக்கப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்.

உடன் மு.பகலவன், மு.மணி பாலன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம்விஸ்வநாதன், எஸ்.ராமஜெயம், பா.முத்துசாமி, இரா.அறிவழகன், கே.ஆறுமுகம், மு.பாஸ்கரன், டி.ஜெ.ஜி.தமிழரசன், எம்.ஜெயசந்திரன், எம்.மெய்யழகன், அ.மனோகரன், உதயகாந்தம்மாள், டி.மஸ்தான், ஆ.மனோகரன், கா.பரத்குமார். திருஞானம், அங்கமுத்து, ஜெயா, கே.சி.ராஜா, ஏழுமலை, எஸ்.கஜேந்திரன், கே.வி.நாகராஜன், டி.கே.ராஜா, அர்ஜீனன், போண்டா சிவா, பா.பரத்குமார், டி.லட்சுமி நாரயணன், ஆர்.எம்.ரவி, தன சேகரன், நரேந்திரன், ஆர்.எஸ்.காளத்தி, அப்பாஸ், சித்திக், எஸ்.செல்வம், வீரன், பாலுமகேந்திரன் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

---

என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பட்டுக்கோட்டையில் சிறப்பு மருத்துவ முகாம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

தஞ்சாவூர், ஜூலை17-

தஞ்சாவூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் சிறப்பு மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முகாமில் பட்டுக்கோட்டை நகர் மன்றத் தலைவர் சண்முகப்பிரியா செந்தில்குமார் தலைமை வகித்தார்.

தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான கா.அண்ணாதுரை முகாமைத் துவக்கி வைத்தார். தலைமை செயற்குழு உறுப்பினரும், பேராவூரணி சட்டமன்ற உறுப்பினருமான நா.அசோக்குமார், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளரும், தஞ்சை மாநகராட்சி துணை மேயருமான அஞ்சுகம் பூபதி முன்னிலை வகித்தனர்.

முன்னதாக மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் வி.சௌந்தர்ராஜன் வரவேற்றார். மாவட்ட மருத்துவர் அணி தலைவர் குணசேகரன் நன்றி கூறினார்.

இதில், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை, தஞ்சாவூர் கேன்சர் மருத்துவமனை, தஞ்சாவூர் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை, பட்டுக்கோட்டை கனகேசத் தேவர் நினைவு மருத்துவமனை, நாடி மருத்துவமனை, திராவிடன் மருத்துவமனையைச் சேர்ந்த பல்வேறு துறை சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு 1,258 பொது மக்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்து, மருந்து, மாத்திரைகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில், பட்டுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.என். செந்தில்குமார், ஒன்றியச் செயலாளர் பா.ராமநாதன், கலை இலக்கிய அணி அமைப்பாளர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர் அணி நிர்வாகிகள், மற்றும் தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பெருந்தலைவர் காமராஜரின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி ஆரோக்கியபுரத்தில் உள்ள பள்ளியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு கனிமொழி கருணாநிதி எம்.பி மலர்தூவி மரியாதை செலுத்தினார். மாவட்டச் செயலாளர், அமைச்சர் கீதா ஜீவன், எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி, மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.